# கவிதைப்பேழை – பராபரக் கண்ணி

1. அன்பருக்குத் தொண்டு செய்வதால் எய்தப்படும் நிலை.

அ) துன்பம் ஆ) அறிவு **இ) இன்பம்** ஈ) மேன்மை

2. அன்னை தெரசா நோய் வாய்ப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்ததன் மூலம் அவரின் _______ வெளிப்படுகிறது.

அ) நட்பு ஆ) பணிவு இ) துணிவு **ஈ) கருணை**

3. பொருந்தா இணையைத் தேர்ந்தெடு.

அ) கூர் - மிகுதி ஆ) ஏவல் - தொண்டு

**இ) எய்தும் - எலும்பு** ஈ) பணி - தொண்டு

4. இரண்டு அடியில் எழுதப்பட்ட செய்யுள்.

அ) மூதுரை ஆ) புதுக்கவிதை இ) நாலடியார் **ஈ) திருக்குறள்**

5. 'பராபரமே' என்பதன் பொருள்.

**அ) மேலான பொருள்** ஆ) பெரும் பரப்பு

இ) தகுதி ஈ) வீட்டின் பகுதி

6. 'வேறொன்று' பிரித்து எழுதினால் கிடைப்பது.

**அ) வேறு + ஒன்று** ஆ) வே + றொன்று

இ) வேறொ + ஒன்று ஈ) வேற்று + ஒன்று

7. விசயரகுநாத சொக்கலிங்கரிடம் தாயுமானவர் என்னவாகப் பணிபுரிந்தார்?

அ) அமைச்சர் **ஆ) பெருங்கணக்கர்**

இ) எழுத்தர் ஈ) புலவர்

8. 'கூர்' என்பதைக் குறிக்கும் மற்றொரு சொல்.

அ) தொண்டு **ஆ) மிகுதி** இ) கனவு ஈ) முனை

9. 'எல்லோரும் இன்பமாக வாழ வேண்டும், அதைத் தவிர வேறு எதுவும் நினைக்க மாட்டேன்' எனக் கூறியவர்.

அ) ஜி.யு.போப் ஆ) தாரா பாரதி **இ) தாயுமானவர்** ஈ) உ.வே.சா

10. 'தமிழ் மொழியின் உபநிடதம்' எனப் போற்றப்படுவது.

அ) மணிமேகலை **ஆ) பராபரக்கண்ணி** இ) தேம்பாவணி ஈ) பரமார்த்த குரு கதை

# கவிதைப்பேழை - நீங்கள் நல்லவர்

1. உழைக்கும் மனிதர்கள் என்னவாக மாறிவிடுகிறார்கள் என கவிஞர் தாராபாரதி கூறுகிறார்.

அ) பழம் **ஆ) புல்லாங்குழல்** இ) இசை ஈ) வேர்

2. தோல்வி வந்தாலும் இழக்கக் கூடாதது.

அ) கவலை ஆ) கோபம் **இ) தன்னம்பிக்கை** ஈ) சோர்வு

3. கலீல் ஜிப்ரான் அவர்கள் _____ நாட்டைச் சார்ந்தவர்.

**அ) லெபனான்** ஆ) அரபுநாடு இ) ஸ்பெயின் ஈ) இஸ்ரேல்

4. சுயம் என்பதன் பொருள்.

**அ) தனித்தன்மை** ஆ) வாழ்க்கை இ) இசை ஈ) செழிப்பு

5. பன்முக ஆற்றல் என்பது _______

அ) பல முகங்கள் கொண்டவர் **ஆ) பல திறன்களைக் கொண்டவர்**

இ) முக ஒப்பனை செய்யும் திறன் ஈ) பாடல் பாடும் திறன்

6. பாராட்டும் போது பாராட்டப்படுபவரின் மனநிலை.

**அ) மகிழ்ச்சி** ஆ) துன்பம் இ) சோர்வு ஈ) கவலை

7. ‘நீங்கள் நல்லவர்’ எனும் கலீல் ஜிப்ரானின் பாடலை தமிழ்மொழியில் மொழி பெயர்த்தவர்.

**அ) புவியரசு** ஆ) கண்ணதாசன் இ) அழ.வள்ளியப்பா ஈ) வைரமுத்து

8. கொடுப்பது பழத்தின் இயல்பு பெறுவது _______ இயல்பு.

அ) பறவையின் ஆ) மனிதனின் **இ) வேரின்** ஈ) கிளையின்

9. பொருந்தா இணையைத் தேர்ந்தெடு.

**அ) உழைப்பு – கவிதை** ஆ) இதயம் - இசை

இ) பெறுவது - வேர் ஈ) கொடுப்பது - பழம்

10. எடுத்த செயலில் தோற்றாலும் கைவிடக் கூடாதது.

அ) துன்பம் ஆ) சோர்வு **இ) முயற்சி** ஈ) தளர்வு

# உரைநடை உலகம் - பசிப்பிணி போக்கிய பாவை

1. இரட்டைக்காப்பியங்களுள் ஒன்று மணிமேகலை மற்றொன்று.

அ) குண்டலகேசி ஆ) சீவகசிந்தாமணி

**இ) சிலப்பதிகாரம்** ஈ) வளையாபதி

2. உணவு தயாரிப்பில் தொடர்புடையவர்.

அ) ஆசிரியர் ஆ) பொறியாளர் **இ) விவசாயி** ஈ) நீதிபதி

3. கோமுகி என்பதன் பொருள்.

**அ) பசுவின் முகம்** ஆ) தீவு இ) அரசன் மகள் ஈ) காளை மாடு

4. உணவை எடுக்க எடுக்க குறையாத பாத்திரம்.

அ) அக்காரச் சுரபி ஆ) உணவுசுரபி **இ) அமுதசுரபி** ஈ) அன்னசுரபி

5. 'புத்தர் பிறந்து அறம் போதித்த பூமி' என்று கூறியவர்.

அ) மன்னர் ஆ) ஆதிரை **இ) மணிமேகலை** ஈ) தீவதிலகை

6. தனி ஒரு மனிதனுக்கு _____ இல்லை என்றால் இந்த ஜகத்தினை அழிக்கலாம்.

அ) ஆடை ஆ) நீர் **இ) உணவு** ஈ) கல்வி

7. மணிமேகலை காப்பியத்தின் படி சிறந்த அறம் _____________.

அ) கற்பிப்பது ஆ) வேலை வாங்கித் தருவது

**இ) உணவு கொடுப்பது** ஈ) வாகனம் ஓட்டுவது

8. மணிமேகலை ______ நகரைச் சேர்ந்தவர்.

அ) மணிபல்லவம் ஆ) கொங்குநாடு **இ) பூம்புகார்** ஈ) மதுரை

9. பொருந்தாததைத் தேர்ந்தெடு.

அ) குண்டலகேசி ஆ) வளையாபதி **இ) கம்ப இராமாயணம்** ஈ) மணிமேகலை

10. அமுதசுரபி தோன்றும் நாள்.

அ) வைகாசி அமாவாசை ஆ) வைகாசி வளர்பிறை

இ) வைகாசி தேய்பிறை **ஈ) வைகாசி பௌர்ணமி**

# விரிவானம் - பாதம்

1. சிறுமி தந்த காலணியைத் தைத்தபின் முதலில் அணிந்தவர்

அ) பக்கத்து வீட்டுக்காரர் ஆ) மாரி

இ) உடன் தொழில் செய்பவர் **ஈ) மாரியின் மனைவி**

2. வரிசைப்படுத்துக.

அ) தைக்கப்பட்ட காலணி பெண்மணிக்குப் பொருந்தவில்லை.

ஆ) முப்பது ஆண்டுகள் கழித்து வந்த நடுத்தர வயதிலிருந்த சிறுமி காலணியைப் பெற்றுச் சென்றாள்.

இ) சிறுமி அழகான காலணியைத் தைக்கக் கொடுத்தாள்.

(ஈ) திரையரங்க வாயிலில் காலணி தைக்கும் மாரி அமர்ந்திருந்தார்.

(உ) காலணியின் மாயத்தன்மை மாரிக்கு வருமானத்தைத் தந்தது.

அ) இ,ஈ,அ,உ,ஆ ஆ) இ,ஆ,அ,ஈ,உ இ) அ,ஆ,இ,ஈ,உ **ஈ) ஈ,இ,உ,ஆ,அ**

3. பாதம் கதை உணர்த்தும் கருத்து

அ) அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சு. ஆ) செல்வமே உலகில் நிலையானது.

இ) பேராசை பெருநட்டம். **ஈ) நேர்மைக்கு விலையில்லை.**

4. செந்நிறக் காலணியின் சிறப்பு

அ) சிறுமியருக்கு மட்டும் பொருந்துவது ஆ) இளைஞர்களுக்கு மட்டும் பொருந்துவது

இ) உரியவருக்கு மட்டும் பொருந்துவது **ஈ) அனைவருக்கும் பொருந்துவது**

5. மாரியிடம் இருந்த சிறுமியின் காலணி

அ) சக்கரங்கள் உடையது ஆ) வழுக்கும் தன்மை உடையது

**இ) மாயத்தன்மை உடையது** ஈ) சாதாரணமானது

6. சிறுமியின் காலணி குறித்த சிறப்புகளுடன் பொருந்தாதது

அ) பெயரிடப்படாத நறுமணம் ஆ) இளஞ்சிவப்பு நிறம்

இ) வெல்வெட்டில் பூவேலை **ஈ) கருப்பு வண்ண அடிப்பாகம்**

7. கதையின் தொடக்கத்திலும் முடிவிலும் உள்ள ஒற்றுமை

அ) மாரியின் வறுமை ஆ) காலணி தைப்பவர் முதியவர்

இ) காலணிக்குரியவர் சிறுமி **ஈ) மழைக்காலம்**

8. பாதம் கதையின் தொடக்கத்தில் மாரியின் நிலை

அ) செல்வந்தர் ஆ) நிலையான வருமானம்

**இ) ஏழ்மை** ஈ) நடுத்தரச் செல்வநிலை

9. காலணியால் மாரி அடைந்தது

அ) பொய்யும் புரட்டும் **ஆ) பணமும் புகழும்**

இ) வெறுப்பும் கோபமும் ஈ) வறுமையும் நோயும்

10. கதையில் வரும் காலணி தைப்பவரின் பண்பு

**அ) நேர்மை** ஆ) கயமை இ) பொய்மை ஈ) கடுமை

11. காலணி அணிந்தபொழுது மக்களிடம் ஏற்பட்ட உணர்வின் வருணனை

அ) புல்லின் மீது நிற்பது போல **ஆ) பனியின் மிருது படர்வது போல**

இ) நெருப்பின் மீது நிற்பது போல ஈ) முள்ளின் மீது நடப்பது போல

12. காலணியைப் பெற்றுச் செல்லச்சிறுமி எடுத்துக்கொண்ட காலம்

**அ) முப்பது வருடங்கள்** ஆ) மறுநாள்

இ) ஒரு வருடம் ஈ) ஒரு வாரம்

# கற்கண்டு – பெயர்ச்சொல்

1. இடுகுறி சிறப்புப்பெயரைத் தேர்ந்தெடு.

    அ) தெரு **ஆ) வாழை** இ) மலை ஈ) பழம்

2. ‘அடுத்த வருடம் என் அப்பா புதிய வீடு கட்டுவார்’ – வாக்கியத்தில் காலப்பெயரைத் தேர்ந்தெடு.

    அ) அப்பா ஆ) வீடு **இ) வருடம்** ஈ) புதிய

3. காரணப்பெயரைத் தேர்ந்தெடு.

    **அ) காதணி** ஆ) மேசை இ) பாறை ஈ) கதவு

4. இடுகுறிப்பெயரைத் தேர்ந்தெடு.

    அ) நாற்காலி ஆ) எழுதுகோல் இ) பறவை **ஈ) வாழை**

5. ‘பள்ளியில் உள்ள மேசை செவ்வக வடிவில் அமைக்கப்பட்டுள்ளது’ - வாக்கியத்தில் பண்புப் பெயரைத் தேர்ந்தெடு.

    **அ) செவ்வகம்** ஆ) மேசை இ) பள்ளி ஈ) வடிவில்

6. காரண சிறப்புப் பெயரைத் தேர்ந்தெடு.

    அ) அணிகலன் ஆ) வானூர்தி **இ) சீரகம்** ஈ) பறவை

7. ‘சாலையில் காவலர் கை அசைத்துப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தினார்’ – வாக்கியத்தில் சினைப் பெயரைத் தேர்ந்தெடு.

    அ) போக்குவரத்து **ஆ) கை** இ) சாலை ஈ) காவலர்

8. பெயர்ச்சொல்லின் வகைகள் _______.

    அ) நான்கு ஆ) ஐந்து இ) மூன்று **ஈ) ஆறு**

9. இடுகுறி பொதுப்பெயரைத் தேர்ந்தெடு.

    அ) இன்று **ஆ) மரம்** இ) நெல் ஈ) நிலா

10. இடப்பெயரைத் தேர்ந்தெடு.

    **அ) மாவட்டம்** ஆ) சதுரம் இ) காகம் ஈ) சித்திரை

# திருக்குறள்

1. இலண்டன் அருங்காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள தமிழ் நூல்.

   அ) மணிமேகலை **ஆ) திருக்குறள்** இ) தமிழ் கையேடு ஈ) கம்ப இராமாயணம்

2. திருக்குறளில் இடம்பெறாத ஒரே எண்.

   அ) மூன்று ஆ) எட்டு இ) ஐந்து **ஈ) ஒன்பது**

3. திருக்குறளின் படி உண்மையான ஈகை என்பது உதவுதல்

   **அ) பிச்சைகாரர்க்கு** ஆ) உடன் பணிபுரிவோர்க்கு

   இ) உறவினர்க்கு ஈ) நண்பனுக்கு

4. 'இன்னா செய்தாரை' - இத்தொடரில் பயின்று வந்துள்ள இடைச்சொல்.

   அ) இன் **ஆ) ஐ** இ) ஆல் ஈ) மற்று

5. இன்னா என்பதன் பொருள்.

   அ) உறக்கம் **ஆ) துன்பம்** இ) துயில் ஈ) இனிமை

6. பின்வருவனவற்றுள் திருவள்ளுவரைக் குறிப்பிடாத பெயர்.

   **அ) புகழ்வேந்தர்** ஆ) பொய்யாப் புலவர் இ) செந்நாப் போதர் ஈ) தெய்வப்புலவர்

7. 'நன்னயம்' – பிரித்து எழுதினால் கிடைப்பது.

   அ) நன்மை + னயம் ஆ) நன் + னயம் **இ) நன்மை + நயம்** ஈ) நன் + நயம்

8. திருக்குறளை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்

   அ) தஞ்சை ஞானபிரகாசர் ஆ) உ.வே.சா

   இ) வீரமாமுனிவர் **ஈ) ஜி.யு.போப்**

9. ஆற்றுவார் ஆற்றல் _______ போற்றுவார்

   போற்றலுள் எல்லாம் தலை.

   அ) பல்லுயிர் ஆ) எல்லாம் இ) பேராற்றல் **ஈ) இகழாமை**

10. திருக்குறளுக்கு முதன் முதலில் உரை எழுதியவர்.

    அ) மு.வ ஆ) பரிமேலழகர் **இ) மணக்குடவர்** ஈ) ஜி.யு.போப்

*****